

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,
மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள்,
கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் ஆகியோர்கள் முன்னிலையில்,
மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக, 60 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2,20,200/- மதிப்பிலான மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களை
இன்று (11.07.2016) நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வழங்கினார்.

செ.வெ.எண்: 432/2016 நாள்: 11.07.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் ஆகியோர்கள் முன்னிலையில், 60 மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களையும், ரோட்டரி உழுவை இயந்திரமும் இன்று (11.07.2016) வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் தீர்வு காண, வருவாய்துறை மூலம் அம்மா திட்டம், மனுநீதிநாள் முகாம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் மேற்கொள்ள ஆணையிட்டுள்ளார்கள். மேலும் அரசின் நலத்திட்ட உதவிகள் அனைத்துதரப்பு மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் ஆகியோர்கள் முன்னிலையில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக, 60 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2,20,200/- மதிப்பிலான மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களை (ஒன்றின் மதிப்பு ரூ.3,670/-) இன்று (11.07.2016) நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வழங்கினார்.

அதனை தொடர்ந்து தோட்டக்கலைதுறை சார்பாக, தேசிய தோட்டக்கலை இயக்கம் 2015-2016-ம் ஆண்டு, தோட்டக்கலை இயந்திரமயமாக்குதல் திட்டத்தின்கீழ் ரூ.76,500/- மதிப்பிலான ரோட்டரி உழுவை ரூ.25,900/- மானியத்தில் ஆரல்வாய்மொழி, திரு. ஜான்ஆல்பர்ட் என்பவருக்கு வழங்கினார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய உறுப்பினர் திரு. ஏ.ஜஸ்டின் செல்வராஜ், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. பிரம்மநாயகம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. நிஜாமுதீன், தோட்டக்கலைதுறை துணை இயக்குநர் திரு. அசோக் மேக்ரின், உதவி இயக்குநர் திருமதி. ஷீலா ஜாண், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. நாஞ்சில் ஏ. முருகேசன், திரு. முத்துகிருஷ்ணன், திரு. நாஞ்சில் சந்திரன் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.